செ.வெ.எண்: 28/ 2020 நாள்: 27.08.2020

**விருதுநகர் மாவட்டம்**
**கொரோனா வைரஸ் தடுப்பையொட்டி 5.84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 36.61 இலட்சம் முகக்கவசங்கள் வழங்கும் பணியினை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் துவக்கி வைத்தார்**

---

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம் A1579 - கூட்டுறவுப் பண்டக சாலை கடை எண்-3 ல் இன்று (27.08.2020) கூட்டுறவுத்துறையின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா முகக்கவசம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன்.,இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். திருவில்லிப்புத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.மு.சந்திரபிரபா அவர்கள் முன்னிலை வகித்தார். மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா முகக்கவசங்களை வழங்கி தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா வைரஸ் தாக்குதலிருந்து பொதுமக்களை பாதுகாத்திட எண்ணற்ற திட்டங்களை அறிவித்தவுடன் இந்த நோய்த்தாக்குதலை பேரிடர் காலமாக அறிவித்து அதற்கேற்ப திட்டங்களை செயல்படுத்தி பொது சுகாதாரத்துறையுடன் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து சிறப்பாக பணியாற்றி தமிழகத்தில் கொரோனா வைரஸ் தாக்குதல் கட்டுக்குள் வைத்த முதல்வராவார். இவரது செயல்பாட்டை பாராட்டும் வண்ணம் மத்திய அரசே கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை எடுத்ததில் தமிழகம் முதன்மை மாநிலம் என பாராட்டைப் பெற்றதாகும். அந்தஅளவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த கொடிய வைரஸ் தாக்குதலிருந்து மனித உயிரிழப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தி வந்த நிலையில் பொதுமக்கள் பல்வேறு இடங்களுக்கு சென்று வரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு வீட்டிலிருந்து வெளியில் செல்லும் ஒவ்வொருவரும் கட்டாயம் முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். அப்பொழுதுதான் பாதுகாப்பான பயணமாக இருக்கும் என எண்ணி ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் விலையில்லா முகக்கவசம் வழங்க உத்தரவிட்டு அனைத்து பகுதிகளிலும் வழங்கப்படுகின்றன.

அதனடிப்படையில், விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் **5,84,301** குடும்ப அட்டைகள் உள்ளன. இதன்மூலம் நகர்ப்பகுதியில் **14,00,632** பயனாளிகளுக்கும், கிராமப்புறங்களில் **22,60,750** பயனாளிகளுக்கும் என ஆக மொத்தம் **18,30,891** பயனாளிகளுக்கு தலா **2** விலையில்லா முகக்கவசங்கள் வீதம் **36,61,382** விலையில்லா முகக்கவசங்கள் வழங்கப்படவுள்ளது. அதனப்படையில், இன்று சிவகாசி வட்டத்தில் உள்ள A1579 - கூட்டுறவுப் பண்டக சாலை கடை எண்-3 ல் நடைபெற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா முகக்கவசம் வழங்கும் நிகழ்ச்சியில் முதற்கட்டமாக 11 குடும்ப உறுப்பினர்களுக்கு விலையில்லா முகக்கவசங்கள் வழங்கியதுடன் மற்ற பகுதிகளிலும் நியாயவிலைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு விலையில்லா முகக்கவசங்கள் வழங்கப்படும். பொதுவாக, நோய்த்தாக்குதல் உள்ள இக்காலக்கட்டத்தில் ஒவ்வொருவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அதேபோல் அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்து தேவையற்ற பயணங்களை பொதுமக்கள் தவிர்த்து பாதுகாப்பாக இருந்து ஆரோக்கியமுடன் இருந்திட வேண்டுமென மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.மங்களராமசுப்பிரமணியன், கூட்டுறவுச்சங்க இணைப்பதிவாளர் திரு.திலீப்குமார், சார் ஆட்சியர் (சிவகாசி) திரு.ச.தினேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கல்யாணசுந்தரம், சிவகாசி வட்டாட்சியர் திரு.வெங்கடேஷ், சிவகாசி கூட்டுறவு பண்டகசாலைத் தலைவர் திரு.அசன்பக்ருதீன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**